# வாடிக்கையாளர்களுக்கான
# நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

## eZ Cash வாடிக்கையாளர்களுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 475 ஆம் இலக்க முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை நடாத்திச் செல்லும், கம்பனிகள் இலக்கம் PQ 38 ஐக் கொண்ட டயலொக் "ஆசிஆட்டா" பிஎல்சி கம்பனியினால் ('டயலொக்') வழங்கப்படும் eZ Cash சேவைகளை பயன்படுத்தும்போது இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அவற்றைக் கட்டுப்படுத்தும்.

எடிசலாட் லங்கா (பிறைவட்) லிமிடட். (PV 8070) பதிவு செய்யப்பட்ட நிறுவனம் இல,109 காலி வீதி கொழும்பு 03

கூட்டமைப்பு கொடுப்பனவு சேவை வழங்குனர்

கொடுப்பனவு சேவை வழங்குனர் தனது சொந்த விருப்பத்தின் பெயரில் எந்தவொரு சந்தா தாரரையும் நிராகரிக்க முடியும்

டயலொக் கம்பனியின் தற்றுணிபின் பேரில் வாடிக்கையாளர் ஒருவர் eZ Cash சேவைகளுக்காக பதிவு செய்து கொள்வதை மறுக்கும் உரிமையை டயலொக் கம்பனி தம்மிடம் முடக்கி வைத்திருக்கும்.

eZ Cash வாடிக்கையாளர் வகுதிக்குரிய eZ Cash கொடுக்கல் வாங்கல் எல்லைகள் / நாளாந்த கொடுக்கல் வாங்கல் எல்லைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக தயவுகூர்ந்து www.Dialog.lk இணையத்தளத்தில் நுழையவும்.

### 1. பொருள் கோடல்

1.1 **"கிடைக்கக்கூடிய மீதி"** என்னும் போது இங்கு விதித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள், ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் உபயோகிக்கப்படக்கூடிய, இந்த வகை முறையில் உள்ள முகப்பு பெறுமதிக்கு சமமாகும் பௌதிக நிதி அளவு எனப் பொருள்படும்.

1.2 **"நாளாந்த கொடுக்கல் வாங்கல் எல்லைகள்"** என்னும் போது ஏதேனும் ஒரு (01) திகதியொன்றில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படக்கூடிய eZ Cash சேவையின் திரட்டிய தொகை எனப் பொருள்படும்.

1.3 **"eZ Cash"** என்னும் போது eZ Cash கொடுக்கல் வாங்கல்களின் போது உபயோகப்படுத்தப்படும் மின்னணு முறை மூலம் மாத்திரம் பரிமாற்றம் செய்யப்படும் மின்னணு பணம் எனப் பொருள்படும்.

1.4 **"eZ Cash கணக்கு"** என்னும் போது eZ Cash கொடுக்கல் வாங்கல்களுக்காக eZ Cash வாடிக்கையாளருக்கு மற்றும்/அல்லது eZ Cash வர்த்தகருக்கு இடமளிப்பதற்காக வகைமுறையினுள் தாபிக்கப்பட்டுள்ள வட்டி கிடைக்கப்பெறாத இலக்கமுறை கணக்கு எனப் பொருள்படும்.

1.5 **"eZ Cash சேவை"** என்னும் போது 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்வு செய்தல் வகைமுறை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை சேவை வழங்குநர்கள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள், 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை சேவை வழங்குநர்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிக் கோவையின் 21 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைக் கொடுப்பனவு சேவைகளுக்கான 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நடைமுறைக் கொடுப்பனவு வழிகாட்டல்களுக்கும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது அத்தகைய பிற உரிய அதிகாரபீடங்களினால் வழங்கப்படுகின்ற ஒழுங்கு

விதிகள் கட்டளைகள், வழிகாட்டலகள் ஆகியவற்றுக்கும் அமைவாக டயலொக் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, eZ Cash கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக eZ Cash வாடிக்கையாளருக்கு இடமளிக்கப்படும் நடைமுறைக் கொடுப்பனவு சேவை எனப் பொருள்படும்.

1.6 **"eZ Cash கொடுக்கல் வாங்கல்"** என்னும் போது 4.1 ஆம் பிரிவில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நாணயத்தில் நாட்டினுள் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் எனப் பொருள்படும்.

1.7 **"eZ Cash வர்த்தகர்"** என்னும் போது வர்த்தகர் ஒருவராக **eZ Cash** வாடிக்கையாளருக்கு eZ Cash மீள விநியோகிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள (தனிநபர் அல்லது அமைப்பொன்று) டயலொக் வாடிக்கையாளர் எனப் பொருள்படும்.

1.8 "eZ Cash வாடிக்கையாளர்" என்னும் போது eZ Cash சேவைக்காக பதிவு செய்து கொண்டுள்ள டயலொக் வாடிக்கையாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

1.9 **"MSISDN"** என்னும் போது ஒன்றிணைக்கப்பட்ட செல்லிட வாடிக்கையாளர் சேவை இலக்க முறை வலையமைப்பு இலக்கம் (செல்லிடத் தொலைபெசி இலக்கம்) எனப் பொருள்படும்.

1.10 **"கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வு"** என்னும் போது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வு, ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஒழுங்குறுத்தல் அதிகாரபீடமொன்றின் நியதிகள், யுத்தம், தேசிய அவசரகால நிலைமைகள், விபத்துக்கள், தீப்பிடித்தல், மின்னல், உபகரணங்கள் செயலிழக்கின்றமை, வகைமுறையின் கணனி அல்லது மென்பொருள் செயலிழத்தல், மின்சாரம் தடைப்படுதல், வழுக்கள், கொடுப்பனவு சேவை வழங்குநரின் வலையமைப்புக்கு அல்லது வலையமைப்புகளுக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பினால் உபகரணத்திற்கு அல்லது உபகரணங்களுக்கு தடை ஏற்படுத்துதல் அல்லது அழித்தல், குழப்பம், வேலை நிறுத்தம், வெளியேற்றல், (எமது ஊழியர்கள் சம்பந்தப்படும் அல்லது அவ்வாறு சம்பந்தப்படாத) தொழிற் பிணக்குகள் எனப் பொருள்படும்.

1.11 **"PIN"** என்னும் போது eZ Cash கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் பொருட்டு டயலொக் நிறுவனத்தினால் eZ Cash வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் பிரத்தியேக அடையாள இலக்கம் எனப் பொருள்படும்.

1.12 **"சிம் கார்ட்"** என்னும் போது டயலொக் வலையமைப்பில் நுழைவதற்காக கொடுப்பனவு சேவை வழங்குநரின் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் வாடிக்கையாளர் அடையாள கூறு எனக் கருதப்படுவதோடு, eZ Cash கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் eZ Cash வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசி இலக்கம் இதுவாதல் வேண்டும்.

1.13 **"வகைமுறை"** என்னும் போது eZ Cash சேவையின் கீழ் பொருட்கள், உற்பத்தி, சேவை, அழைப்புகள் பெறும் காலம் மற்றும் நிதி மாற்றல்கள் சார்பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வசதிகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு டயலொக் நிறுவனத்தினால் செயல்நிலைப்படுத்தியுள்ள கொடுப்பனவு முறைக்கான வகைமுறை எனப் பொருள்படும்.

1.14 **"நியதிகள் மற்றும் நிபந்தனைகள்"** என்னும் போது கொடுப்பனவு சேவை வழங்குநரின் தனது தற்றுணிபின் பேரில் காலத்துக்குக் காலம் மாற்றப்படக்கூடிய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எனப் பொருள்படும்.

1.15 **"இணையத் தளம்"** என்னும் போது www.dialog.lk / www.etisalat.lk எனப் பொருள்படும்.

## 2. ஆரம்பிக்கப்படும் திகதி

2.1 eZ Cash சேவைக்காக eZ Cash வாடிக்கையாளரின் பதிவு அங்கீகரிக்கப்படும் திகதியிலிருந்து eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய ஆரம்பிக்கலாமென்பதோடு, இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, பதிவானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டால் அல்லது முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரை நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

## 3. ஆகக் குறைந்த தகைமைகள்

3.1 eZ Cash சேவைக்காக பதிவு செய்து கொள்வதன் மூலம் eZ Cash வாடிக்கையாளர் இலங்கையில் வதிந்துள்ள ஒருவர் எனவும் 18 வயதுக்கு மேற்பட்டவர் எனவும், தாம் வைத்திருக்கும் ஒன்றிணைக்கப்பட்ட செல்லிட வாடிக்கையாளர் சேவையின் இலக்கமுறை வலையமைப்பு (செல்லிடத் தொலைபேசி இலக்கம்) (**MSISDN** ) இலக்கத்தின் உரிமையாளர் எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 4. eZ Cash சேவையை பயன்படுத்துதல்

4.1 டயலொக் நிறுவனத்தினால் தனது தனியானதும் முழுமையானதுமான தற்றுணிபின் பேரில் பின்வரும் பணிகளுக்காக டயலொக் eZ Cash வாடிக்கையாளர்களுக்கு eZ Cash சேவை ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

4.1.1 ஏதேனும் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள் கொள்வனவுக்கான கொடுப்பனவு சார்பில்;

4.1.2 செலவுப் பட்டியல் மற்றும் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் சார்பில்;

4.1.3 eZ Cash Top-up மற்றும் மீளப் பெறுகைகள் சார்பில்;

4.1.4 eZ Cash கணக்கொன்றிலிருந்து பிற கணக்கொன்றுக்கு eZ Cash மாற்றுதல்;

4.1.5 பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள்: உதாரணமாக: பண மீதியினைப் பரிசீலித்தல், பிரத்தியேக அடையாள இலக்கத்தை (PIN) மாற்றுதல், குறுகிய கணக்குக் கூற்றுக்கள் (இறுதி 5 eZ Cash கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள்);

4.1.6 இணையத்தளத்தில் காலத்திற்குக் காலம் விபரங்கள் பிரகடனப்படுத்தப்படும். eZ Cash சேவையின் கீழ் வழங்கப்படும் வேறு ஏதேனும் மேலதிக eZ Cash கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வசதிகள்.

4.2 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கணக்கின் மீது கடன், வட்டி அல்லது இலாபம் பெறுதல்/பெற்றுக் கொடுத்தல், ஏதேனும் கழிவொன்றின் கீழ் eZ Cash வழங்குகை மற்றும்/ அல்லது eZ Cash கணக்கில் கிடைக்கக்கூடிய மீதியின் நிதிப் பெறுமதியினை விஞ்சும் ஏதேனும் விதத்திலான நலனொன்று பெற்றுக் கொள்ளப்படலாகாது.

4.3 **MSISDN** செல்லிடத் தொலைபெசி இலக்கத்திற்குரியதாக திரட்டப்பட்டுள்ள அழைப்புக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய காலப்பகுதியின் நிதிப் பெறுமதியை eZ Cash கணக்கொன்றுக்கு

மாற்றப்படலாகாது. ஆயினும், அதில் கிடைக்கக்கூடிய மீதியைப் பயன்படுத்தி, அழைப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய காலப்பகுதியைக் கொள்வனவு செய்யலாம்.

4.4 eZ Cash வாடிக்கையாளரின் MSISDN செல்லிடத் தொலைபேசி இலக்கம்/சிம் அட்டை நிறுத்தப்பட்டால் அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டால், இயைபுள்ள eZ Cash வாடிக்கையாளரின் eZ Cash கணக்கு தடையுறுத்தப்பட வேண்டுமென்பதோடு, eZ Cash வாடிக்கையாளருக்கு ஏதேனும் கொடுப்பனவு சேவை வழங்குனர் நிலையமொன்றிலிருந்து பணத்தொகையை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

4.5 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதன் மூலம் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் டயலொக் நிறுவனத்தினால் காலத்துக்குக் காலம் அறிவிக்கப்படுகின்றவாறு eZ Cash கணக்கின் மீது வரி, கட்டணங்கள் அல்லது வேறு ஏதேனும் இயைபுள்ள கட்டணங்கள் அவரது eZ Cash கணக்கிலிருந்து அறவிடுவதற்கு கொடுப்பவு சேவை வழங்குனருக்கு அதிகாரம் கையளிக்கப்படும்.

4.6 eZ Cash சேவைக்காக பதிவு செய்ததன் பின்னர், eZ Cash வாடிக்கையாளர் தனது பிரத்தியேக அடையாள இலக்கமான நான்கு (04) இலக்கங்களுடனான இலக்கத்தை உள்வழிப்படுத்துதல் வேண்டும். இந்த பிரத்தியேக அடையாள இலக்கம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இரகசியமாக வைத்துக் கொள்வதன் மூலம் அதன் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் eZ Cash வாடிக்கையாளர் பொறுப்புச் சொல்ல வேண்டுமென்பதோடு, இந்த பிரத்தியேக அடையாள இலக்கத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

4.7 பிரத்தியேக அடையாள இலக்கத்துடன் **MSISDN** செல்லிடத் தொலைபெசி இலக்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் ஏதேனும் உறுதிப்படுத்துகையொன்று, eZ Cash வாடிக்கையாளரினால் வழங்கப்பட்டதாகக் கருதப்படுவதோடு, இந்த உறுதிப்படுத்துகையின் மூலம் eZ Cash வாடிக்கையாளர் கட்டுப்படுதல் வேண்டும்.

4.8 பிரத்தியேக அடையாள இலக்கத்தை பயன்படுத்தி eZ Cash சேவையின் ஏதேனும் பகுதியொன்றுக்கு நுழையும் சந்தர்ப்பத்தில் eZ Cash வாடிக்கையாளர் அதன்பால் பிணைக்கப்படுவார்.

4.9 eZ Cash வாடிக்கையாளரின் அனுமதியுடனோ அல்லது அனுமதியின்றியோ பிரத்தியேக அடையாள இலக்கத்தை பயன்படுத்தி eZ Cash வாடிக்கையாளரின் eZ Cash சேவையின் சகல நோக்கங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் எவரேனும் மூன்றாவது தரப்பினர் உட்புகுந்தால் அந்த உட்புகுதலானது அதிகாரமுள்ள ஒன்றாகவும் செய்யப்பட்ட eZ Cash கொடுக்கல் வாங்கல் அனைத்தும் செல்லுபடியான கொடுக்கல் வாங்கல்களாவும் கருதப்படுதல் வேண்டும்.

4.10 eZ Cash வாடிக்கையாளரினால் செய்யப்படும் பயன்பாடுகளுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் மூன்று (03) வேலை நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்படும்.

4.11 eZ Cash கொடுக்கல் வாங்கல் எதுவும் மீள மாற்றப்பட முடியாது.

## 5. உறுதிகள் மற்றும் பொறுப்புக்கள்

eZ Cash வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக் கொண்டு பொறுப்புச் சொல்லப் பிணிக் கப்படுவது யாதெனில் :

5.1 eZ Cash சேவைக்காக பதிவு செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதெனவும்;

5.2 கொடுப்பவு சேவை வழங்குனரினால் காலத்துக்குக் காலம் கோரக்ககூடிய மேலதிக விபரங்கள் " eZ Cash " வாடிக்கையாளரினால் வழங்கப்பட வேண்டுமென்பதோடு அவ்வாறு செய்யத் தவறுமிடத்து கொடுப்பவு சேவை வழங்குனரினால் தனது தற்றுணிபின் பேரில் "eZ Cash" சேவையை இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அது காரணமாய் அமையலாம் எனவும்;

5.3 eZ Cash வாடிக்கையாளரினால் வழங்கப்படும் தகவல்கள் தரவுக் களஞ்சியமொன்றில் வைத்திருக்கப்படும் என்பதோடு eZ Cash வாடிக்கையாளருக்கு அறிவிக்காது அல்லது வாடிக்கையாளரின் அங்கீகாரமின்றி கொடுப்பவு சேவை வழங்குனர் தேவையெனக் கருதப்படக் கூடியவாறு இந்த தகவல்களை பயன்படுத்த, களஞ்சியப்படுத்த, புலனாய்வு செய்ய அத்துடன் அனுப்ப அத்துடன்/அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறு ஏதேனும் நியதிச் சட்ட அதிகாரபீடமொன்றுடன் / நிறுவனமொன்றுடன் பரிமாற்றம் செய்ய முடியுமெனவும்;

5.4 MSISDN இலக்கம் eZ Cash வாடிக்கையாளரின் பெயரில் பதிவு செய்யப்படுவதோடு , eZ Cash சேவைகளுக்காக இந்த இலக்கம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் எவரேனும் மூன்றாம் தரப்பொன்றினால் இச்சந்தர்ப்பத்தில் MSISDN இலக்கத்தின் உரிமை தொடர்பில் உரிமை கோரப்படமாட்டாதெனவும்;

5.5 eZ Cash வாடிக்கையாளரால் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள ஏற்பாடுகள் எதுவும் மீறப்படமாட்டாதெனவும்;

5.6 eZ Cash வாடிக்கையாளரினால் இயைபுள்ள சகல சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், கோவைகள், விதிகள், ஒழுங்கு விதிகள், இயைபுள்ள அதிகாரபீடங்களின் அறிவித்தல்கள் ஆலோசனைகள் அல்லது கட்டளைகள் அல்லது eZ Cash சேவை சம்பந்தமாக டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்படும் ஏதேனும் அறிவித்தல்கள், கட்டளைகள் அல்லது வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைவாக செயலாற்றப்படுமெனவும்;

5.7 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கணக்கொன்று மோசடியாக பதிவு செய்யப்படலாகாதென்பதோடு, கொடுப்பனவு சேவை வழங்குனர் eZ Cash வாடிக்கையாளரினால் எவரேனும் ஆள் ஒருவராக அல்லது பிற சட்டபூர்வ வாடிக்கையாளர் ஒருவராக ஆள் மாறாட்டம் செய்யப்படின் இந்த மோசடியான செயற்பாடு காரணமாக எழக்கூடிய பொறுப்புக்கள் சம்பந்தமாக இந்த eZ Cash வாடிக்கையாளரினால் தனியாக பொறுப்புச் சொல்லுதல் வேண்டும். eZ Cash சேவையை முறைக்கேடான விதத்தில உபயோகப்படுத்துதல் eZ Cash சேவையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு / இடைநிறுத்துவதற்கு அத்துடன் இயைபுள்ள அதிகாரிகளுக்கு இதுபற்றி அறிவிப்பதற்கு ஏதுவாய் அமையுமெனவும்;

5.8 இயைபுள்ள சகல சட்டங்களின், ஒழுங்கு விதிகளின் கீழ் eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையை ஏதேனும் சட்டவிரோதமான செயற்பாடொன்றுக்காக உபயோகப்படுத்தக்கூடாதெனவும்;

5.9 eZ Cash வாடிக்கையாளரினால் அவருக்குரிய அதிகாரம் பெற்ற நாளாந்த கொடுக்கல்

வாங்கல் எல்லைக்குள் ஏதேனும் தொகையொன்றை eZ Cash கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு (Top-up ) செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு முடியும். டயலொக் நிறுவனத்தினால் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்திற்கும் ஒழுங்கு விதிகளுக்கும் உட்பட்டு, எவ்வித அறிவித்தலுமின்றி eZ Cash கணக்கின் எல்லையை திருத்தலாமெனவும்;

5.10 MSISDN இலக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பிரத்தியேக அடையாள இலக்கத்திற்குரிய eZ Cash கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான சகல அறிக்கைகளும் இதனால் கட்டுப்படுவதோடு, eZ Cash வாடிக்கையாளரின் பதிவு தொடர்பிலான இறுதி சாட்சியொன்றாகுமெனவும்;

5.11 eZ Cash வாடிக்கையாளர் சகல eZ Cash கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் தமது eZ Cash கணக்கு தொடர்பிலான அறிக்கைகளை வைத்துக் கொள்வது தொடர்பிலும் பொறுப்புச் சொல்லுதல் வேண்டும்.

5.12 இலங்கை மத்திய வங்கி அத்துடன்/அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குறுத்துகை அல்லது அரசாங்க அதிகாரபீடங்களினால் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய பிற இயைபுள்ள நியதிகள், நிபந்தனைகள், விதிகள், ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுக்கு eZ Cash சேவை பயன்படுத்துகை உட்படும் எனவும்;

5.13 டயலொக் நிறுவனத்தின் எழுத்துமூல அனுமதியின்றி eZ Cash சேவையை வேறு எவரேனும் மூன்றாம் தரப்பிற்கு சாட்டுவதற்கு அல்லது மாற்றுவதற்கு இயலாதென்பதோடு, eZ Cash வாடிக்கையாளரினால் மாத்திரம் உபயோகப்படுத்துதல் வேண்டும். டயலொக் நிறுவனத்தின் எழுத்துமூல அனுமதியின்றி eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையை வேறு எவரேனும் மூன்றாந் தரப்பிற்கு சாட்டுவதன் அல்லது மாற்றுவதன் காரணமாக எழும் ஏதேனும் (நேரடியான அல்லது மறைமுகமான) செலவுகள், நட்டங்கள், சேதங்கள் அல்லது வருமான இழப்புகள், இலாப இழப்புகள் அல்லது வேறு ஏதேனும் விதத்திலான பிற இடைநேர்விளைவான நட்டங்கள் சம்பந்தமாக கொடுப்பனவு சேவை வழங்குனரால் பொறுப்புச் சொல்லமாட்டாதெனவும்;

5.14 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கணக்கை அத்துடன்/அல்லது eZ Cash சேவையை ஏதேனும் விதத்திலான பணியொன்றுக்காக ஏதேனும் பிணையமொன்றாக வைப்பதற்கு அல்லது பாவிப்பதற்கு முடியாது.

கொடுப்பனவு சேவை வழங்குனரின் எழுத்துமூல அங்கீகாரமின்றி eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையை பிணையமாக பயன்படுத்துவதன் காரணமாக எழும் ஏதேனும் (நேரடியான அல்லது மறைமுகமான) செலவு, நட்டம் அல்லது சேதங்கள் அல்லது வருமான இழப்புகள் அல்லது இலாப இழப்புகள் அல்லது வேறு ஏதேனும் விதத்திலான பிற இடைநேர் விளைவான நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பேற்க மாட்டாதெனவும்;

5.15 கொடுக்கல் வாங்கலின் பெறுமதி, பெறுபவரின் தகவல் அடங்கலாக இருப்பினும் இவை மாத்திரம் வரையறுக்கப்படாத சகல eZ Cash கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பரிசீலனை செய்யும், உண்மையானதென உறுதிப்படுத்திக் கொள்ளும் பொறுப்பு eZ Cash வாடிக்கையாளருடையதாதல் வேண்டும். eZ Cash வாடிக்கையாளரின் கவனக் குறைவினால் ஏற்படும் பிழையான பதிவுகளை நீக்குமாறு செய்யப்படும் கோரிக்கைகள் கொடுப்பனவு சேவை வழங்குனரினால் பொறுப்பேற்கப்பட மாட்டாதெனவும்;

5.16 முழுமையற்ற அல்லது குறைபாடுடன் கூடிய தரவுகள் அல்லது கொடுப்பனவு சேவை

வழங்குனரினால் கிடைத்ததாக கருத முடியாத தகவல்கள் அல்லது தரவுகள் அல்லது வேறு ஐயப்பாடுடைய தகவல்கள் அல்லது செய்தி கிடைக்கப்பெற்றவுடன் eZ Cash வாடிக்கையாளரினால் அது பற்றி கொடுப்பனவு சேவை வழங்குனருக்கு அறிவிக்கப்படுதல்வேண்டும். eZ Cash வாடிக்கையாளரினால் அத்தகைய தரவுகள் அல்லது தகவல்களை தனது செல்லிடத் தொலைபேசியிலிருந்து அழித்து நீக்கலாமெனவும்;

5.17 உண்மையென உறுதிப்படுத்திக் கொள்ளும், வேறு ஏதேனும் சட்டப்பணி சார்பில் eZ Cash வாடிக்கையாளரின் பெயர், MSISDN இலக்கம் அத்துடன் அத்தகைய பிற தனிப்பட்ட தகவல்கள் கொடுப்பனவு சேவை வழங்குனரினால் வேறு எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கலாமெனவும்;

eZ Cash வாடிக்கையாளர் இத்தால் இணங்கியுள்ளாரென்பதுமாகும்.

## 6. கோரிக்கை கைவிடல்

6.1 சட்டத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட முழுமையாக வெளிப்படுத்திய அல்லது அதன் உட்கிடையான ஏதேனும் பிரதிநிதித்துவமின்றி "அவ்வாறே" என்னும் அடிப்படையில் eZ Cash சேவை வழங்கப்படும். eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையை பயன்படுத்தும் அவதானத்தைத் தாமே வகித்தல் வேண்டும்;

6.2 டயலொக் நிறுவனத்தின் ஏதேனும் வேண்டுமென்ற கவனமின்மை மூலம் அல்லது காரணமாக eZ Cash சேவையை வழங்குதல், பயன்படுத்துதல், நீக்குதல் அத்துடன்/அல்லது முடிவுக்குக் கொண்டுவருதல் காரணமாக அல்லது இதன் மூலம் eZ Cash வாடிக்கையாளருக்கு அத்துடன் / அல்லது மூன்றாம் (03) தரப்பொன்றுக்கு ஏற்கவேண்டி நேரிடும் ஏதேனும் இழப்புகள், சேதங்கள், ஆகுசெலவுகள், செலவுகள் சம்பந்தமாக கொடுப்பனவு சேவை வழங்குனர் அத்தகைய எவரேனும் ஆளொருவருக்கு பொறுப்புச் சொல்வதற்கு அல்லது பொறுப்பேற்பதற்கு கட்டுப்படாதிருத்தல் வேண்டும்;

6.3 சூழ்நிலைகள் இந்த நியதிகள், நிபந்தனைகளுக்கு உரியதாகின்றனவா அவ்வாறு உரியதாகாமல் இருக்கின்றனவா என்பதைக் கவனத்திற் கொள்ளாது ஏதேனும் மூன்றாந் தரப்பொன்று, ஆளொருவர் அல்லது நிறுவனமொன்று eZ Cash சேவையை நிராகரித்தமை அல்லது ஏற்றுக்கொள்ளாமை அல்லது eZ Cash சேவையை மட்டுப்படுத்தியமை அல்லது இரத்துச் செய்தமை அல்லது அத்தகைய பிற சூழ்நிலைகள் அடங்கலாக இருப்பினும் இவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத ஏதேனும் சூழ்நிலைகளின் மீது eZ Cash வாடிக்கையாளருக்கு ஏற்க வேண்டி நேரிடுகின்ற ஏதேனும் நட்டங்கள், சேதங்கள் சம்பந்தமாக எத்தகைய காரணத்தின் மீதும் கொடுப்பனவு சேவை வழங்குனரால் பொறுப்புச் சொல்லமாட்டாது;

6.4 eZ Cash வாடிக்கையாளரினால் தமது பிரத்தியேக அடையாள இலக்கத்துடன் அனுப்பப்படும் உறுதிப்படுத்துகையின் மீது செயலாற்றுதல் சம்பந்தமாக கொடுப்பனவு சேவை வழங்குனர் பொறுப்புச் சொல்லமாட்டாது. இந்த உறுதிப்படுத்துகை தொடர்பிலான ஏதேனும் பிழை, மோசடி, மோசடியான நடவடிக்கை, கவனக்குறைவு, தெளிவின்மை அல்லது தவறாகக் புரிந்து கொள்ளல் எதுவாகவிருந்தாலும் அதனைக் கவனத்திற் கொள்ளாது இந்த உறுதிப்படுத்துகை கொடுப்பனவு சேவை வழங்குனருக்கு கிடைக்கப்பட்டவிடத்து அது இரத்துச் செய்யப்பட முடியாததும் eZ Cash வாடிக்கையாளரின் பால் கட்டுப்பட்டதுமாதல் வேண்டும்.

## 7. கணக்குக் கூற்று

7.1 USSD கணனி முறையின் ஊடாக சுருக்க கணக்குக் கூற்றொன்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு eZ Cash வாடிக்கையாளருக்கு உரியதாகும். eZ Cash வாடிக்கையாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டவிடத்து, இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) மாதங்களைக் கொண்ட உச்ச காலப்பகுதியொன்றுக்கு விரிவான கணக்குக் கூற்றொன்று அத்தகைய கட்டணமொன்றின் மீது வழங்கப்படும்.

## 8. சட்டமும் பிணக்குகளைத் தீர்த்தலும்

8.1 இந்த நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையிலுள்ள சட்டங்களினால் கட்டுப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு, அதற்கமைவாக அச்சட்டங்களினால் பொருள் கொள்ளப்படவும் வேண்டும். இந்த நியதிகள், நிபந்தனைகள் தொடர்பிலான சகல நோக்கங்களுக்காகவும் இலங்கை நீதிமன்றங்களின் விலக்களிக்கப்படாத நியாயாதிக்கத்திற்குள் eZ Cash வாடிக்கையாளர் இத்தால் அழிக்க முடியாதவாறும் நிபந்தனையற்றும் அதை ஏற்கின்றார். டயலொக் நிறுவனத்தினால் eZ Cash வாடிக்கையாருக்கு எதிராக பிற எந்த நீதிமன்றத்தில் அல்லது தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்திற்குள் எந்த நடவடிக்கைகளையும் கொண்டுவருவதற்கு அல்லது ஆரம்பிப்பதற்கான டயலொக் நிறுவனத்தின் உரிமையை இந்த வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயத்தினாலும் மட்டுப்படுத்த முடியாது.

8.2 இந்த நியதிகள் நிபந்தனைகள் பிற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படலாமென்பதோடு, இதன்மூலம் எழக்கூடிய ஏதேனும் ஒவ்வாமை அல்லது தெளிவின்மை இருக்குமாயின் , அத்தகைய ஏதேனும் மொழி வாசகத்தைவிட ஆங்கில மொழி வாசகமானது மேலோங்கியிருத்தல் வேண்டும்.

8.3 eZ Cash கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட திகதியிலிருந்து அத்துடன்/அல்லது கட்டணம், பிற அறவீடுகள் அத்துடன் வரி eZ Cash கணக்கின் மீது அறவிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் இந்த கொடுக்கல் வாங்கல் அல்லது அத்தகைய கட்டணம், பிற அறவீடுகள் அத்துடன் வரி சம்பந்தமாக eZ Cash வாடிக்கையாளரினால் பிணக்கு செய்யப்படலாம்.

8.4 அத்தகைய எல்லா பிணக்குகளும் தீர்த்துக் கொள்வதற்கு அல்லது ஈடு செய்து கொள்வதற்கு கொடுப்பனவு சேவை வழங்குனரால் சகல முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டுமென்பதோடு, அத்தகைய பிணக்குகள் சம்பந்தமாக டயலொக் நிறுவனத்தின் தீர்மானம் இறுதியானதும் முடிவானதுமென eZ Cash வாடிக்கையாளர் இத்தால் உடன்படுதல் வேண்டும்.

8.5 இதில் குறிப்பிடப்பட்டுள்ள eZ Cash கொடுக்கல் வாங்கல்களும் டயலொக் நிறுவனத்தினால் நடாத்திச்செல்லப்படுகின்ற சம்பவ குறிப்பு ஏடானது , ஏதேனும் விதத்திலான பிணக்கொன்று தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மூலமாக கணிக்கப்படுவதோடு, ஏதேனும் பிணக்குகளை தீர்க்கையில் இந்த சம்பவ குறிப்பு ஏட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

**9. கட்டணங்களும் அறவீடுகளும்**

9.1 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவைகளுக்காக நடைமுறையிலுள்ள கட்டணமும் ஒவ்வொரு eZ Cash கொடுக்கல் வாங்கல்களுக்குமான eZ Cash கொடுக்கல் வாங்கல் கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும். இயைபுள்ள கட்டணங்களும் அறவீடுகளும் கொடுப்பனவு சேவை வழங்குனரால் காலத்துக்குக் காலம் பிரகடனப்படுத்தப்படும் கட்டண அளவுகளின் அடிப்படையாய் அமைதல் வேண்டும். eZ Cash வாடிக்கையாளருக்கு அறிவித்து அல்லது அவ்வாறு அறிவிக்காது கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு உள்ள உரிமை டயலொக் நிறுவனம் தம்மிடம் முடக்கி வைத்துக் கொள்ளும். புதிய கட்டணங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு இணையத் தளத்திற்குள் நுழையவும்.

9.2 eZ Cash வர்த்தக நிலையங்களின் மூலம் செய்யப்படும் eZ Cash கொடுக்கல் வாங்கல்களுக்கான கட்டணங்களையும் கொடுப்பனவு சேவை வழங்குனரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு ஏதேனும் கட்டணங்களையும் செலுத்துவது eZ Cash வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

**10. eZ Cash கொடுக்கல் வாங்கல் வரைமுறைகள்**

10.1 டயலொக் நிறுவனத்தினால் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்தின் மீது காலத்துக்குக் காலம் eZ Cash கொடுக்கல் வாங்கல் வரைமுறை (வரைமுறைகள்) விதித்துரைக்கப்படலாம்.

10.2. eZ Cash வாடிக்கையாளரினால் இந்த வரைமுறைகளை விஞ்சுவதற்கு டயலொக் நிறுவனத்தின் முன் அங்கீகாரம் பெற்றிருந்தாலொழிய, குறிப்பிடப்பட்டுள்ள உரிய வரைமுறை (வரைமுறைகள்) விஞ்சப்படலாகாது.

**11. மோசடியான பாவனை அல்லது காணாமற்போன/ களவாடப்பட்ட உபகரணங்கள்**

11.1 eZ Cash சேவை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் டயலொக் நிறுவனத்தின் சொத்தாகுமெனவும் அவ்வாறு சொத்தொன்றாக இருக்குமெனவும் eZ Cash வாடிக்கையாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பதோடு:

11.1.1 eZ Cash சேவைகள் பேணப்படும் போதும் பயன்படுத்தப்படும் போதும் மிகக் கவனமாகவும் ஊக்கத்துடனும் செயலாற்றப்படல் வேண்டும்.

11.1.2 eZ Cash சேவைக்குத் தேவையற்ற தலையீடுகளை செய்யக்கூடாதென்பதோடு, வேறு எவருக்கும் இதில் தலையிடுவதற்கும் இடமளிக்காதிருத்தல் வேண்டும்.

11.2 eZ Cash வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசி காணாமற் போதல், மோசடியான செயல், ஐயப்பாடுடைய மோசடியான செயல், நேர்மையற்ற செயல், களவாடப்படல் அல்லது eZ Cash கணக்கு சட்டவிரோதமாக உபயோகப்படுத்தல் என்பன தொடர்பில் eZ Cash வாடிக்கையாளரினால் உடனடியாக கொடுப்பனவு சேவை வழங்குனரின் நுகர்வோர் சேவைக்கும் பொலிசிற்கும் அறிவித்தல் வேண்டும். eZ Cash சேவை இணைப்பை இடைநிறுத்துவதற்கு மேற்குறிப்பிட்டவாறு eZ Cash வாடிக்கையாளரிடமிருந்து அறிவித்தலொன்று கிடைக்கப்பெறும் வரை, செல்லிடத் தொலைபேசி காணாமற் போதல் / களவாடப்படல் அல்லது eZ Cash சேவையின் மோசடியான பாவனை

ஆகியவற்றுக்குரிய சகல கட்டணங்களுக்கும் eZ Cash வாடிக்கையாளர் ஆட்படுதல் வேண்டும்.

11.3 காணாமற் போன அல்லது களவாடப்பட்ட சிம் காட்டை மீள வழங்குவதற்கு கொடுப்பனவு சேவை வழங்குனரால் தீர்மானிக்கப்படுகின்றவாறு மேலதிகக் கட்டணமொன்றுக்கு உட்படும்.

11.4 மேல் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் eZ Cash சேவையை மோசடியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதென, களவாடப்பட்டுள்ளதென அல்லது தேவையற்ற தலையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதென ஐயப்பாடு இருப்பின் அல்லது eZ Cash சேவை பாவனையானது வகைமுறைக்கு பங்கம் விளைவிக்கும் என கொடுப்பனவு சேவை வழங்குனர் தீர்மானிக்குமாயின் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக eZ Cash சேவையை பயன்படுத்துவதை கொடுப்பனவு சேவை வழங்குனரால் நிராகரிக்கலாமென்பதோடு, இதன் விளைவாக eZ Cash வாடிக்கையாளருக்கு ஏற்க வேண்டி நேரிடுகின்ற ஏதேனும் நட்டம், செலவு அல்லது இழப்பு சம்பந்தமாக கொடுப்பனவு சேவை வழங்குனர் பொறுப்பு சொல்ல வேண்டியதில்லை.

## 12. முடிவுறுத்துதலும் இடைநிறுத்துதலும்

12.1 கொடுப்பனவு சேவை வழங்குனரால்தனது தற்றுணிபின் பேரில், இது தொடர்பில் eZ Cash வாடிக்கையாளருக்கு அறிவிப்பதன் மூலம் eZ Cash சேவையை பயன்படுத்துவதை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இடை நிறுத்துவதற்கு அல்லது eZ Cash சேவையின் நடவடிக்கை முறை செயற்பாட்டு முறை ஆகியவற்றை மாற்றுவது சம்பந்தமாக eZ Cash வாடிக்கையாளரின்பால் நிபந்தனைகளை அல்லது வரையறைகளை விதிக்கலாம்.

12.2 பிரிவு 12.1 ஐ கவனத்திற் கொள்ளாது தமது தற்றுணிபின் பேரில் அத்தகைய ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையின் பாவனையை பின்வரும் சூழ்நிலைகளில் இருப்பினும் இதற்குள் வரையறுக்கப்படாத வேறு ஏதேனும் விடயமொன்றின் மீது உடனடியாக இடைநிறுத்தும் /முடிவுக்குக் கொண்டுவரும் உரிமை கொடுப்பனவு சேவை வழங்குனர்தன்னிடம் முடக்கி வைத்துக் கொள்ளும்.

12.2.1 டயலொக் நிறுவனத்தின் கருத்திற்கமைய eZ Cash வாடிக்கையாளர் வஞ்சகமான, மோசடியான, சட்டவிரோதமான அத்துடன் / அல்லது குற்றச் செயலொன்றில் அல்லது பிறழ்கூற்றொன்றில் ஈடுபட்டிருத்தல்;

12.2.2 eZ Cash வாடிக்கையாளரினால் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பாடுகள் எவற்றையேனும் மீறுதல் அல்லது கொடுப்பனவு சேவை வழங்குனரிற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய செயற்பாடொன்றில் ஈடுபட்டிருத்தல்;

12.2.3 ஏதேனும் தரப்பொன்றால், ஒழுங்குறுத்துகை நிறுவனமொன்றினால் அல்லது அரசாங்க நிறுவனமொன்றினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டங்கள், நியதிச் சட்டங்கள், துணைச் சட்டங்கள், விதிகள் அத்துடன்/அல்லது ஒழுங்கு விதிகள் எவற்றையும் eZ Cash வாடிக்கையாளர் மீறியிருத்தல்;

12.2.4 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவைக்கான கோரிக்கையைச் செய்யும் போது பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்திருத்தல் அல்லது உண்மையற்ற தகவல்களை பிரகடனப்படுத்தியிருத்தல்;

12.2.5 eZ Cash வாடிக்கையாளர் தீங்கான அல்லது தீய கருத்துடன் செயற்பட்டிருத்தல்; அத்துடன்/ அல்லது;

12.2.6 eZ Cash வாடிக்கையாளரின் செயற்பாடுகள் கொடுப்பனவு சேவை வழங்குனரின் உரிமைகளுக்கு கேடு விளைவிக்குமென கொடுப்பனவு சேவை வழங்குனரால் கருதப்படுதல்.

12.3 செல்லிடத் தொலைபேசிச் சேவைகளுக்கான டயலொக் நிறுவனத்துடனான உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டவிடத்து eZ Cash சேவை சுயமாக முடிவுறும்.

12.4 eZ Cash வாடிக்கையாளரினால் தனது MSISDN செல்லிடத் தொலைபேசி இலக்கத்தை அல்லது பதிவு செய்யப்பட்ட பெயரை மாற்றினால் eZ Cash வாடிக்கையாளரினால் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீதே மீண்டும் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

12.5 eZ Cash வாடிக்கையாளரினால் கொடுப்பனவு சேவை வழங்குனரின் கிளைகளின் ஊடாக முறைப்படி சமர்ப்பிக்கப்படும் eZ Cash கணக்கை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றி பூர்வாங்க எழுத்து மூல அறிவித்தலொன்றை கொடுப்பனவு சேவை வழங்குனரிற்கு வழங்குவதன் மூலம் ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் eZ Cash சேவையை முடிவுக்குக் கொண்டு வரலாம். அத்தகைய எழுத்துமூல கோரிக்கை கிடைத்ததன் பின்னர் கொடுப்பனவு சேவை வழங்குனரால் கணக்கின் மீதியாயுள்ள நிலுவையை மூன்று (03) நாட்களுக்குள் மீண்டும் வழங்குதல் வேண்டும்.

12.6 eZ Cash சேவை முடிவுற்றதன் பின்னர் அல்லது காலம் முடிவடைந்ததன் பின்னர் eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash கணக்கை மூடாமல் இருந்தால், இது தொடர்பில் மேலதிக அறிவிப்பொன்றைச் செய்து அல்லது அவ்வாறு அறிவிப்பொன்றைச் செய்யாமல் eZ Cash வாடிக்கையாளரின் eZ Cash கணக்கை இடை நிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உரிமையை கொடுப்பனவு சேவை வழங்குனர் தன்னிடம் முடக்கி வைத்துக் கொள்ளும்.

## 13. முடிவுறுத்தியதன் / இடைநிறுத்தியதன் விளைவு

13.1 eZ Cash சேவை முடிவுற்றதன் பின்னர் அல்லது காலம் முடிவடைந்ததன் பின்னர் eZ Cash கணக்கில் காணப்படும் நிலுவையாக உள்ள மீதித் தொகையை கொடுப்பனவு சேவை வழங்குனரால் நிர்ணயிக்கப்படும் நிருவாகக் கட்டணம் மற்றும் அறவீடுகளை கழித்துக் கொண்டதன் பின்னர் மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

13.2 கொடுப்பனவு சேவை வழங்குனரால் 12 ஆம் பிரிவின் பிரகாரம் eZ Cash சேவையை அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை முடிவுக்குக் கொண்டு வந்தால் அல்லது இடைநிறுத்தப்பட்டால் ஏற்புடையவாறு இயைபுள்ள அதிகாரிகளின் இசைவாக்கத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னரன்றி அல்லது அவ்வாறு பெறும் வரை eZ Cash கணக்கில் மீதியாய் உள்ள தொகையை மீள செலுத்துவதற்கு அல்லது மீள கையளிப்பதற்கு கொடுப்பனவு சேவை வழங்குனர் கட்டுப்படமாட்டாதென eZ Cash வாடிக்கையாளர் மேலும் உடன்படல் வேண்டும்.

13.3 eZ Cash சேவை இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் இணைப்பை மீள ஏற்படுத்தும் கட்டணமொன்றுக்கும் கொடுப்பனவு சேவை வழங்குனரிற்கு கிடைக்கப்பெற வேண்டிய சகல நிலுவைத் தொகைகளுக்கும் அத்துடன் /அல்லது eZ Cash கணக்கை மீள நிறுவுவதற்காக கொடுப்பனவு சேவை வழங்குனரால் விதித்துரைக்கப்படக்கூடிய வேறு

ஏதேனும் தொகையொன்றும் செலுத்தப்படுவதற்கு உட்பட்டு, கொடுப்பனவு சேவை வழங்குனரால் தனது தற்றுணிபின் பேரில் eZ Cash சேவையை மீள ஏற்படுத்தலாம்.

13.4 இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது சட்டத்தினால் கொடுப்பனவு சேவை வழங்குனரிற்கு சொந்தமான வேறு ஏதேனும் உரிமையொன்றுக்கு, பரிகாரமொன்றுக்கு இந்த 13 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.

## 14. நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் திருத்துதலும் மீள் நிலைப்படுத்துதலும்

14.1 பிரிவு 14.2 க்கு உட்பட்டும் வேறு விதத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தாலுமொழிய, டயலொக் நிறுவனத்தினால் பொருத்தமானதெனக் கருதப்படுகின்றவாறு, இது தொடர்பில் எவ்வித அறிவித்தலுமின்றி இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எவற்றையும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்கு, திருத்துவதற்கு, சேர்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு உள்ள உரிமையை கொடுப்பனவு சேவை வழங்குனர் தன்னிடம் தங்க வைத்துக் கொள்வதோடு, இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை திருத்துவதற்கு, சேர்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு eZ Cash வாடிக்கையாளர் கட்டுப்படுதல் வேண்டும்.

14.2 இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் சொல்லப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் திருத்துவது தொடர்பிலான ஏதேனும் அறிவித்தல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பொருத்தமான தொடர்பாடல் ஊடகமொன்றின் மூலம் eZ Cash வாடிக்கையாளருக்கு கையளிக்கலாம்.

## 15. பொறுப்புக்களின் வரைமுறையும் நட்டோத்தரவாதமும்

15.1 சட்டத்தினால் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள முழு அளவுக்கும் இந்த உடன்படிக்கையின் பிற எந்த ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ளாது இந்த உடன்படிக்கையின் மூலம் எழும் சகல பொறுப்புக்களும் டயலொக் நிறுவனத்தினால் தவிர்க்கப்படும்.

15.2 eZ Cash வாடிக்கையாளரினால் eZ Cash சேவையை உபயோகித்தல் அல்லது வேறு ஏதும் காரணமொன்றினால் எழும் ஏதேனும் (நேரடி அல்லது மறைமுக) செலவு, நட்டம், சேதம் சம்பந்தமாக அல்லது ஏதேனும் வருமானம் இல்லாமற் போதல், இலாபம் இல்லாமற் போதல் அல்லது ஏதேனும் இடைநேர் விளைவான நட்டங்கள் சம்பந்தமாக கொடுப்பனவு சேவை வழங்குனர் பொறுப்புச் சொல்வதற்கு ஆட்படாதிருத்தல் வேண்டும். மேல் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் உடன்படிக்கைக்கையின் (நியதிச் சட்டப் பொறுப்புக்களைக் முறித்தல் அல்லது கைவிடுதல் அடங்கலாக), சிவில் குற்றங்களின் கீழ் அல்லது வேறு விதத்தில் eZ Cash வாடிக்கையாளரின்பாலான கொடுப்பனவு சேவை வழங்குனரின் முழுமையான பொறுப்பு eZ Cash வாடிக்கையாளரின் eZ Cash கொடுக்கல் வாங்கல்களின் பொறுப்புக்கு மாத்திரம் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

15.3 eZ Cash சேவையின் அல்லது அதன் ஏதேனும் பகுதியொன்றின் மூலம் அனுப்பப்பட்ட, அனுப்பப்படும் அல்லது களஞ்சியப்படுத்தியதன் மூலம் எழும் ஏதேனும் மோசடி கவலையீனம், வரைதூறு, மீறுகை, அந்தரங்கத் தன்மை, ஆக்கவுரிமைத் தலையீடு, ஆக்கவுரிமை, முறிவு, நம்பிக்கை அல்லது சிறப்புரிமை மீறல், ஏதேனும் சட்டமொன்றை அல்லது கட்டளையொன்றை மீறல் சம்பந்தமான ஏதேனும் உரிமைக் கோரிக்கைகள் அத்துடன் eZ Cash வாடிக்கையாளரின் ஏதேனும் நடத்தை அல்லது மீறுகை அல்லது eZ Cash சேவையின் அல்லது அதன் ஏதேனும் பகுதியொன்றின் அத்துமீறிய பாவனை அல்லது முறைகேடான பாவனை மூலம் எழும் ஏனைய சகல உரிமைக் கோரிக்கைகள்

காரணமாக எழும் ஏதேனும் நட்டம், சேதம், பொறுப்பு அல்லது செலவுகளிலிருந்து கொடுப்பனவு சேவை வழங்குனரை நட்டோத்தரவாதமளித்து பொறுப்பிலிருந்து பாதுகாத்து வைப்பதற்கு eZ Cash வாடிக்கையாளர் இத்தால் உடன்படுதல் வேண்டும்.

**16. டயலொக் நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை இலக்கங்கள்**

16.1 மேலதிகத் தகவல்களுக்காகவும் விசாரணைகளுக்காகவும் தயவு கூர்ந்து 777 ஆம் இலக்கம் கொண்ட சேவை இலக்கத்தை அழைக்கவும்.

**17. கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வு**

17.1 இதன் கீழான சொந்த பொறுப்புக்கள் எதனையும் நிறைவேற்றுவதற்கு கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வொன்றின் காரணமாக தடைப்பட்டதாக ஒரு தரப்பு நம்புமாயின் அந்த நிகழ்வு தொடர்பில் அத்தரப்பினால் மற்றைய தரப்பிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில், அத்தகைய நிலைமைகளில் தன்னிலை விளக்கமாக கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வினை குறிப்பிடுவதன் மூலம் அத்தரப்பு தடுத்தல் வேண்டும். இந்த கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வு மூன்று (03) மாதங்களுக்குத் தொடருமாயின் இந்த நியதிகள், நிபந்தனைகளின் 12.12 ஆம் வாசகத்தைக் கவனியாமல் இரு தரப்பில் எத்தரப்பும் மற்றைய தரப்பிற்கு அறிவித்தல் மூலம் உடனடியாகச் செயலுக்கு வரத்தக்கதாக eZ Cash சேவையை முடிவுறுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கும்.

**18. நியதிகள், நிபந்தனைகளின் பல்வகைமையும் செயல்விளைவும்**

18.1 ஏதேனும் இயைபுள்ள சட்டமொன்றின் கீழ் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடொன்று செல்லுபடியற்றதாக்கப்படல், சட்டவிரோதமான அல்லது நடைமுறைப்படுத்தப்பட முடியாததாயினும், இதன் மூலம் பிற ஏற்பாடுகளில் எந்த செயல்விளைவையும் தீங்கையும் ஏற்படுத்தக்கூடாதென்பதோடு இத்தகைய செல்லுபடியற்ற, சட்டவிரோத, நடைமுறைப்படுத்த முடியாத ஏற்பாடுகள் நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

19. **அறிவித்தல்**

19.1 வேறு விதத்தில் விதித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய கொடுப்பனவு சேவை வழங்குனரால் இணையத் தளத்தில் அல்லது ஆகக் குறைந்தது தினசரி பிரசுரமாகும் சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகையொன்றில் பிரசுரிப்பதன் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அல்லது முற்கொடுப்பனவு அஞ்சல் மூலம் அல்லது eZ Cash வர்த்தகரின் MSISDN இலக்கத்துக்கு எழுத்துமூல செய்தியொன்று அனுப்பப்படுவதன் மூலம் eZ Cash வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

19.2 அவ்வாறு வழங்கப்படும் அறிவித்தல் (அ) இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டால் பிரசுரிக்கப்படும் சந்தர்ப்பத்தில்; (ஆ) பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டால் அவ்வாறு பிரசுரிக்கப்படும் திகதியில்; (இ) மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டால் அறிவித்தல் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில்; (ஈ) முற்கொடுப்பனவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டால், முற்கொடுப்பனவு கடிதம் அனுப்பப்பட்ட திகதியன்றுக்கு அடுத்து வரும் திகதியில்; (உ) எழுத்துமூல அறிவித்தலொன்றின் மூலம் அனுப்பப்பட்டால் எழுத்துமூல அறிவித்தல் அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தில் eZ Cash வாடிக்கையாளருக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டுள்ளதெனவும் eZ Cash வாடிக்கையாளரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள தெனவும் கவனத்திற் கொள்தல் வேண்டும்.

நான் இலங்கையரென்பதையும் 18 ற்கும் மேற்பட்ட வயதுடையவரெனவும் MSISDN செல்லிடத் தொலைபேசி இலக்கத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். மேற்போந்த நியதிகளையும், நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் எனவும் இந்த நியதிகள், நிபந்தனைகளின் மூலம் கட்டுப்படுத்தப்படுவதற்கு உடன்படுகின்றேன் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். சகல கட்டணங்களையும் அறவீடுகளையும் வழங்குவதற்கு உடன்படுகின்றேன்.

கீழே குறிப்பிடப்படும் திகதியிலிருந்து eZ Cash கணக்கொன்றைத் திறப்பதன் மூலம் எனக்கு eZ Cash சேவையை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

பெயர் :
MSISDN இலக்கம் :
தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :
கையொப்பம் :
திகதி :